# சுய-ஸ்வாப் செய்வதற்கான வழிமுறைகள்

## QUIDEL QUICKVUE என்டிஜன் விரைவு பரிசோதனைக்கு

**இக் காரணங்களுக்காகப் பரிசோதனையை மேற்கொள்ள வேண்டாம்:**



கடந்த 24 **மணி நேரத்தில்** மூக்கில் இரத்தக் கசிவு



கடந்த 4 **வாரங்களில்** மூக்கில் அறுவை சிகிச்சை



கடந்த 8 **வாரங்களில்** முகத்தில் காயம் ஏற்பட்டிருந்தால்

## ஸ்வாப் செய்வதற்கான செயல்முறை

**1** பரிசோதனையைத் தொடங்குமுன் உங்கள் கைகளை சுத்தம் செய்யவும்.



**2** ஏற்கனவே திரவம் நிரப்பப்பட்ட ஒரு குழாயிலிருந்து அதன் மூடியை அகற்றவும். குழாயை அதன் பிடிமானத்தில் மீண்டும் வைக்கவும்.



**3** மூக்கு ஸ்வாப் குச்சியைச் சுற்றியிருக்கும் தாளை உரித்து எடுக்கவும்.

ஸ்வாப் குச்சியின் நுனியைத் தொட வேண்டாம்



**4** **மூக்கு துவாரத்துக்குள் ஸ்வாப் குச்சியை நுழைக்கவும் (சுமார் 1.5cm முதல் 2cm வரை). மூக்கு துவாரம் ஒவ்வொன்றின் உட்புறச் சுவரைச் சுற்றிலும் ஸ்வாப் குச்சியைக் குறைந்தது 4 முறை தேய்க்கவும்.** மாதிரியைச் சேகரிக்க 15 வினாடிகள் எடுத்துக் கொள்ளவும்.



**5** திறந்திருக்கும் திரவம் நிரப்பப்பட்ட குழாயில் உடனடியாக ஸ்வாப் குச்சியை நுழைக்கவும். குழாயின் அடிப்பகுதியைக் குச்சி தொட வேண்டும். **3 அல்லது 4 முறை குச்சியைச் சுழற்றவும்.**




**6** **குறைந்தது ஒரு நிமிடம்** ஸ்வாப் குச்சியைக் குழாயில் அப்படியே விட்டு விடவும்.






குறைந்தது 1 நிமிடத்திற்கு ஸ்வாப் குச்சியியை உள்ளே விட்டு விடவும்!

**7** **ஸ்வாப் குச்சியை வெளியில் எடுக்கும்போது, குச்சியின் நுனியை குழாயின் சுவற்றில் முடிந்தவரை தேய்க்கவும். அப்போதுதான் அதிகமான திரவம் வெளியாகும்.** ஸ்வாப் குச்சியின் நுனியைத் தொட வேண்டாம். **ஸ்வாப் குச்சியைப் பயோஹசார்ட் பையில் அப்புறப்படுத்தவும்.**



# சுய-ஸ்வாப் செய்வதற்கான வழிமுறைகள்

## QUIDEL QUICKVUE என்டிஜன் விரைவு பரிசோதனைக்கு

## ஸ்வாப் செய்வதற்கான செயல்முறை

**8** பரிசோதனை துண்டு உள்ள பையைக் கோடிட்ட இடத்தில் கிழிக்கவும். பரிசோதனை துண்டைக் கவனமாக வெளியில் எடுக்கவும். **அதன் மேற்பகுதியை மட்டும் பிடிக்கவும்.**




**9** திறந்திருக்கும் திரவம் நிரப்பப்பட்ட குழாயில் பரிசோதனை துண்டை நுழைக்கவும். பரிசோதனை துண்டில் காணப்படும் அம்பு குறிகள் கீழ் நோக்கி இருக்க வேண்டும்.

**10** **பரிசோதனைத் துண்டில் முடிவுகளை சரிபார்க்கும் முன் 10 நிமிடங்கள் காத்திருக்கவும்.**

சோதனைத் துண்டை குறைந்தது 10 நிமிடங்களுக்கு உள்ளே விட்டு விடவும்!




**11** **குழாயிலிருந்து பரிசோதனைத் துண்டை அகற்றியவுடன் 5 நிமிடங்களுக்குள் அதில் தோன்றும் முடிவைப் படிக்க வேண்டும். தவறான முடிவுகளைத் தவிர்க்க இது உதவும்.** இவ்வேளையில் பரிசோதனை துண்டை ஒரு தட்டையான மேற்பரப்பில் வைக்கவும்.

நேர்மறையான (பாசிடிவ்) முடிவு



எதிர்மறை (நெகடிவ்) முடிவு



முடிவு செல்லுபடியாகாது



- இளஞ்சிவப்பு - சிவப்பு நிறத்தில் பரிசோதனைக் கோடு மற்றும் நீல நிறத்தில் கட்டுப்பாட்டுக் கோடு தோன்றினால், இது **நேர்மறையான பரிசோதனை முடிவைக்** குறிக்கும்.

- நீல நிற கட்டுப்பாட்டுக் கோடு மட்டும் தோன்றினால், இது **எதிர்மறையான பரிசோதனை முடிவைக்** குறிக்கும்

- இளஞ்சிவப்பு - சிவப்பு பரிசோதனைக் கோடு தோன்றினாலும் கூட, நீல நிற பரிசோதனைக் கோடு தோன்றாமல் இருக்கலாம். மற்றும் பின்னணி நிறம் தெளிவாக இல்லாமல், பரிசோதனையின் முடிவை வாசிப்பதில் இடையூறாக இருக்கலாம். அப்படி என்றால் **பரிசோதனையின் முடிவு செல்லுபடியாகாது. மற்றொரு பரிசோதனைக் கருவியைக் கொண்டு பரிசோதனையை மீண்டும் செய்யவும்.**

நேர்மறை முடிவு அல்லது செல்லுபடியாகாத முடிவு இரண்டு முறை ஏற்பட்டால், இப்பரிசோதனை முடிவை மேலும் மதிப்பீடு செய்வதற்கும், அதனை உறுதிப்படுத்தும் பரிசோதனை செய்வதற்கும் தயவுசெய்து மருத்துவ உதவியை நாடவும்.

**12** பரிசோதனைக்குப் பிறகு உங்கள் கைகளை சுத்தம் செய்யவும்.

